# வேதாகமத்தை நாம் ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ள முடியுமா?

*இன்றைய நாட்களில் மிகச் சிறிதளவே வேதாகமம் படிக்கப்படுகின்றது என்பது துன்பந்தரும் ஒரு உண்மை ஆகும். பல மக்கள் தேவனுடைய வசனத்தை வாசிப்பதும் படிப்பதும் கிடையாது. பல காரணங்களினால் இது உண்மையாகும். (1) அக்கறையின்மையின் காரணமாக அவர்கள் அதை வாசிக்கத் தவறுகின்றார்கள். பல மக்கள் வேதாகமத்தைப் பற்றி முற்றிலும் அக்கறையற்றவர்களாய் இருக்கின்றார்கள். அது உண்மையா அல்லவா என்பது பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. அவர்கள் அதன் மீது ஆர்வம் கொள்வதில்லை. (2) மற்றவர்கள், மதத்தின் பாடக் கருத்துக்களைப் பற்றி இலேசான கவலை கொண்டுள்ளார்கள், ஆனால் அவர்கள் வேதாகமத்தின் முக்கியத்துவத்தை உணராதிருப்பதால் அதைப் படிப்பதில்லை. அவ்வகையான உணவின் மீது ஒரு ருசியை அவர்கள் ஒருபொழுதும் வளர்த்துக் கொள்கிறதில்லை. (3) சிலர் தங்களின் மறைவான நிலையை தேவனுடைய சத்தியம் என்ற கண்ணாடியானது வெளிப்படுத்திவிடும் என்பதால் அதைக் காண விரும்புவதில்லை. அவர்கள் அதில் காண்பதை விரும்புவதில்லை. (4) இன்னொரு வகையான மக்கள், வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்று மனதில் ஆழப்பதிந்துள்ள கருத்தினால் அதைப் படிப்பதில்லை.*

*வேதாகமத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது பற்றி நாம் பேசுவதால், இந்தப்பாடமானது மேற்கூறிய நான்காவது குழுவின் மேல் அதிகமாய்க் கவனம் செலுத்தும்.*

## *அதை நாம் புரிந்து கொள்ள முடியுமா?*

*வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்ற கருத்தானது ரோமன் கத்தோலிக்கக் குருக்களால் கண்டு பிடிக்கப்பட்டதாகும். இது மக்கள் தங்களின் உரிமையை இழக்கச் செய்வதற்காக குருக்களால் கண்டு பிடிக்கப்பட்ட கோட்பாடாகும். வேதவசனங்கள் பொது*

மக்களுக்கானவைகள் அல்லவென்றும், முறையான விளக்கம் பெற அவர்கள் (கத்தோலிக்க) சபையி(குருக்களி)டம் வரவேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இப்படியாக, அவர்கள் தங்கள் உறுப்பினர்களை உதவியற்ற குடிமக்களாக ஆக்கியிருக்கின்றனர்.

வேதவசனங்கள் என்பவை அகம்பாவ எண்ணம் கொண்ட ஒரு சில அலுவலர்களுக்கு மட்டுமானவையல்ல, எல்லா மக்களுக்கும் அவை உரியவை என்று தெளிவாகக் காணப்படுகின்றன. "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள் பரிபூரணமாய் வாசம் பண்ணக் கடவது" (கொலோ. 3:16) என்று கிறிஸ்தவர்கள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். "தேவ வசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாய் இருக்கும்படி" (1 பேது. 2:3) நமக்கு புத்தி கூறப்பட்டுள்ளது. வேதவசனங்கள் நமது போதனைக்காக எழுதப்பட்டுள்ளதாக (ரோமர் 15:4; 1 கொரி. 10:11) பவுல் கூறினார். அவர் தமது நிருபமானது பரிசுத்தமான சகோதரர் *எல்லாராலும்* வாசிக்கப்பட வேண்டும் (1 தெச. 5:27) என்று கட்டளையிட்டார். வேதவசனங்கள் பொதுவாக மக்களுக்கானவைகள் அல்லவென்றால் இந்தக் கூற்றுக்களின் அர்த்தம் என்ன? நம்மால் புரிந்து கொள்ளப்பட முடியாத சிலவற்றை வாசிக்கும்படி தேவன் நமக்குக் கட்டளையிட்டாரா? அப்படியிருந்தால், பின்வரும் இரண்டு கூற்றுக்களில் ஒன்று உண்மையானதாக இருக்க வேண்டும்: ஒன்று, நாம் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் தேவன் ஒன்றைக் கொடுக்க முடியவில்லை அல்லது அவர் அவ்விதம் கொடுக்க மாட்டார். அதாவது அவர் தம் வல்லமையைக் குற்றப்படுத்த முடியாது, மற்றும் அவர் தமது நற்பண்பை மறுக்க மாட்டார் என்று கூற வேண்டும். நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்று அவர் அறிந்திருந்தும், தேவன் ஒரு வெளிப்படுத்துதலைக் கொடுத்து, எல்லா மக்களும் அதை வாசிக்கும்படி கட்டளையிட்டிருப்பார் என்று நிச்சயம் நாம் நம்ப முடியாது.

## அதை நாம் ஒரே விதமாகப் புரிந்து கொள்ள முடியுமா?

வேதாகமத்தை நாம் புரிந்து கொள்ள முடியும் என்று சிலர் ஒத்துக் கொள்ளுகையில், நாம் யாவரும் அதை ஒரே விதமாகப் புரிந்து கொள்ள முடியாதென்று இன்னும் வலியுறுத்துகின்றார்கள். இது முன்பு நாம் விவாதித்த அதே கருத்தின் மாற்றப்பட்ட வடிவம் ஆகும். இது வேதவசனங்களின் அர்த்தத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்று குருக்கள் ஏற்படுத்தியுள்ள அதே வாதம் ஆகும். நமது முந்திய கூற்றுக்கள் மறுபடியும் இங்கு பயன்பாடு பெறுகின்றன: நாம் ஒரே விதமாய்ப் புரிந்து கொள்ளும்படியான வெளிப்படுத்துதலைத் தேவன் தந்திராவிட்டால், ஒன்று அவர் அதைக் கொடுத்திருக்க முடியாது அல்லது அவர் அதைக் கொடுத்திருக்க மாட்டார்.

எல்லாரும் புரிந்து கொள்ளக்கூடிய செய்தியொன்றைத் தேவன் கொடுக்க முடியும் என்பது நிச்சயம்; எல்லாரும் புரிந்து கொண்டால், எல்லாரும் ஒரே விதமாகவே புரிந்து கொள்ள வேண்டும். சிலர்

வேதாகமத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாமே தவிர, நாம் அதை வெவ்வேறு விதமாகப் புரிந்து கொள்ள முடியாது.

பின்வரும் முடிவுக்கு நாம் கட்டாயப் படுத்தப்படுகின்றோம்: நாம் ஒரே விதமாகப் புரிந்து கொள்ளக்கூடிய வெளிப்படுத்துதலைத் தேவன் கொடுத்திருக்கவில்லையென்றால், நாம் அவ்விதம் செய்ய வேண்டும் என்று அவர் விரும்பவில்லை என்பதே காரணமாய் இருக்கும். இருந்தாலும், நாம் ஒரே விதமாய்ப் புரிந்து கொள்ள வேண்டும் என்றே தேவன் எதிர் பார்க்கின்றார்/விரும்புகின்றார். அவரது மக்கள் ஒத்திசைவாய் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். புதிய ஏற்பாடானது ஒருமைப்பாட்டை இறைஞ்சுகின்றது (யோவா. 17:21; 1 கொரி. 1:10).

புரிந்து கொள்ளுதல் இன்றி ஒருமைப்பாடு இருக்க முடியுமா? இருக்க முடியாது! "இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?" (ஆமோ. 3:3). ஆகையால், ஒருமைப்பாட்டிற்கான வேண்டுகோளானது, நாம் வேதாகமத்தைப் படித்துப் புரிந்து கொள்ளவும், அதை ஒரே விதமாகப் புரிந்து கொள்ளவும் வேண்டுமென்றுதான் தேவன் எதிர்பார்க்கின்றார் என்று வலியுறுத்துகின்றது. பிரசங்க மேடையில் ஒரு பிரசங்கியார் அன்றாடம் நின்று ஒவ்வொரு முறையும் இரட்சிப்புக்கென்று மாறுபட்ட திட்டமொன்றைப் பிரசங்கிப்பதைத் தேவன் அங்கிகரிப்பாரா? இல்லையென்றால், மாறுபட்ட பத்து மனிதர்கள் இரட்சிப்புக்கான மாறுபட்ட பத்து திட்டங்களைப் போதிப்பதை அவர் எப்படி அனுமதிக்க முடியும்?

## மத வேறுபாடுகளைப் பற்றி என்ன?

நாம் வேதாகமத்தை ஒரே விதமாகப் புரிந்து கொள்ள முடியாதென்பதற்கு நமது வேறுபாடுகளே ஆதாரங்களாகும் என்று சிலர் வலியுறுத்தலாம். அவைகள் உள்ளனவா? நமது சில வேறுபாடுகள் யாவை?

மத உலகமானது மதச் சட்டங்களினால் பிரிந்து கிடக்கின்றது. எந்த மதச்சட்டங்கள்? வேதாகமமா? யாராவது வேதாகமத்தை மதச் சட்டமாக ஏற்க மறுக்கின்றார்களா? இல்லை.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் என்று உரிமைகோருபவர்கள் பல்வேறு பெயர்களினால் (நாமகரணக் கூட்டங்களினால்) பிரிந்து கிடக்கின்றார்கள். என்ன பெயர்கள்? "கிறிஸ்தவர்" என்ற பெயரா? இல்லை. வேதாகமத்தில் காணப்படாத பெயர்களினாலேயே பிரிவினை ஏற்பட்டுள்ளது.

அது போலவே, எது ஞானஸ்நானம் என்பதிலும் ஆராதிப்பவர்கள் பிரிந்து கிடக்கின்றார்கள் ... சிலர் முழுகாட்டுதலையும், சிலர் தெளித்தலையும், சிலர் ஊற்றுதலையும் பிரசங்கிக்கின்றார்கள். இவைகளில் எவற்றினால் நாம் பிரிந்துள்ளோம்? ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுதலை (கொலோ. 2:12) யாராவது மறுக்கின்றாரா? இல்லை! வேதாகமத்தில் காணப்படாத ஒன்றை நடைமுறைப் படுத்துவதால்தான் பிரிவினை உண்டாகின்றதே தவிர, தேவனுடைய வசனத்தில்

*போதிக்கப்படும் உபதேசங்களினால் பிரிவினை உண்டாவதில்லை.*

## *முடிவுரை*

*உங்கள் வேதாகமத்தை வாசியுங்கள் மற்றும் படியுங்கள். அது "உங்கள் கால்களுக்குத் தீபமும் உங்கள் பாதைக்கு வெளிச்சமுமாய்" (சங். 119:105) இருப்பதை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் அதை எவ்வளவு அதிகமாய் வாசித்துப் படிக்கின்றீர்களோ, அந்த அளவுக்கு அதைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் உங்களில் வளருவதை நீங்கள் காண்பீர்கள். "திரு வசனமாகிய ஞானப்பாலின்மேல் வாஞ்சையாய் இருங்கள்" (1 பேது. 2:3).*

*வேதாகமமே போதுமானது என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அதனுடன், அது ஒன்றுடன் மட்டுமே திருப்தியடையுங்கள்! வேதவசனங்களில் குறிப்பிடாத நடைமுறைகளில் விலகிச் செல்லாதிருங்கள், ஏனெனில் அவைகளே தவறாகப் புரிந்து கொள்ளுதலுக்கும், பிரிவினைகளுக்கும் முக்கிய காரணங்களாய் உள்ளன. வேதாகமத்தில் திருப்தி அடையுங்கள்!*